**சுகாதார மற்றும் மருத்துவ சேவை முன்னேற்ற செயற்திட்டம் -2019**

சுகாதார மற்றும் மருத்துவ சேவை முன்னேற்ற செயற்திட்டத்தின் 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த முதலாவது கணக்கீட்டு ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மைக்கும் இடையில் 2017 நவம்பர் 30 இல் இடம்பெற்ற கலந்துரையாடல் குறிப்புக்களின் II ஆம் பின்னிணைப்பின் 12 ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னாள் சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சாகவிருந்த தற்போதைய சுகாதார அமைச்சானது செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் செயற்திட்ட முகாமைத்துவ பிரிவு செயற்திட்டத்தின் அமுல்படுத்தல் முகவராக உள்ளது. மூன்றாம் நிலை வைத்தியசாலைகளில் உள்ள மருத்துவ வசதிகள் மற்றும் உபகரணங்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய வசதிகளை மேம்படுத்துவதன் மூலம், தொற்றாத நோய்கள், குறிப்பாக இருதய நோய்களைக் (cardiovascular diseases) கண்டறிந்து சிகிச்சையளிப்பதற்கான மருத்துவ சேவையை மேம்படுத்தி அதன் மூலம் செயற்திட்ட பிரதேசங்களிலுள்ள மக்களின் சுகாதாரத்தை முன்னேற்றுவதற்கு பங்களிப்பதே இச் செயற்திட்டத்தின் நோக்கமாகும். கடன் உடன்படிக்கை மற்றும் கலந்துரையாடல் குறிப்புக்களின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த கிரயம் ரூபா 16,559 மில்லியனுக்கு சமமான ஜப்பான் யென் 11,352 மில்லியனானதுடன் அதில் ரூபா 15,519 மில்லியனுக்கு சமமான ஜப்பான் யென் 10,639 மில்லியன் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மையால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. ரூபா 1,040 மில்லியன் மிகுதி தொகை இலங்கை அரசாங்கத்தால் நிதியளிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2018 ஒக்தோபர் 20 இல் தொடங்கியிருந்ததுடன் 2025 ஒக்தோபர் 20 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது.

## 1.3 அபிப்பிராயம்

செயற்திட்டத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினக் கூற்றையும் அதனது காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற

அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | இணங்காமை/ கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| 2019 மார்ச் 15 ஆம் திகதிய 01/2019 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் 2.2.8 ஆம் பந்தி | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் 67 வயதுக்கு மேற்பட்ட செயற்திட்ட ஊழியர்கள் செயற்திட்டத்திற்கு ஆட்சேர்ப்பு செய்யப்படக்கூடாத போதிலும் செயற்திட்டக் காலப்பகுதியின் இறுதியில் 69 வருடங்களை பூர்த்தி செய்யும் ஊழியர் ஒருவர் செயற்திட்டத்திற்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்தார். | பிரதி செயற்திட்ட பணிப்பாளர் ஒருவரை தெரிவு செய்வதற்கான நேர்முகப்பரீட்சை குழு சுகாதார அமைச்சின் செயலாளரால் தலைமைதாங்கப்பட்டது. குறித்த சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள வரம்புகளுக்கு மேல் குறித்த பதவிக்கான தகுதிகள் மற்றும் அனுபவத்தை குறித்த நேர்முகப்பரீட்சை குழு கருத்தில் கொண்டிருந்தது. | செயற்திட்டம் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுடன் இணங்குதல் வேண்டும். |

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக செயன்முன்னேற்றம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| செயற்திட்ட அமுல்ப்படுத்தல் அட்டவணையின் பிரகாரம் செயற்திட்டத்திற்கான ஆலோசனை சேவையை தெரிவு செய்தல் 2018 இல் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிடப்பட்டது, ஆனால் ஆலோசனை சேவைக்கான ஒப்பந்தங்களில் கையெழுத்திடுதல் 2020 பெப்ரவரி 18 வரை தாமதமாகியிருந்தது. இதன் விளைவாக, செயற்திட்டத்தின் கீழ் அமுல்ப்படுத்தப்பட வேண்டிய நிர்மாணங்கள் மற்றும் பெறுகைகள் தாமதமாகியிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது ரூபா 659.48 மில்லியன் கடன்களின் தாமதத்தை விளைவித்திருந்தது. | இறுதிக் கலந்துரையாடல் குறிப்பில் உள்ள அமுல்ப்படுத்தல் பட்டியல் செயற்திட்டத்தின் உண்மையான அமுல்ப்படுத்தலைப் பிரதிபலித்திருக்கவில்லை. JICA மூலம் ஜப்பான் அரசாங்கத்திற்கு இச் செயற்திட்டத்தின் அமுல்ப்படுத்தல் கட்டமைப்பு தொடர்பான தகவல்களை வழங்குவதற்காக இது தயார் செய்யப்பட்டுள்ளது. 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டு காலப்பகுதியின் போது ஆயத்த ஆய்வு என்ற தலைப்பில் ஆவணத்தை தயாரித்த ஜப்பானிய குழுவினரால் இத்தகைய தற்காலிக பட்டியலிடல் தயாரிக்கப்பட்டு ரோக்கியோ ஜப்பானில் இருந்து JICA மதிப்பீட்டுப் பணி (Appraisal Mission) மூலம் உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. | செயற்திட்ட அமுல்ப்படுத்தல் அட்டவணையின் பிரகாரம் செயற்திட்ட செயற்பாடுகளை விரைவாக நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

3.2 **குறைப்பயன்பாடுடைய வளங்கள்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
| --- | --- | --- |
| இலங்கை அரசாங்கம் செயற்திட்டத்திற்காக ரூபா 40 மில்லியன் தொகையை வழங்கியிருந்த போதிலும் இது ரூபா 14.58 மில்லியன் அல்லது 36 சதவீதத்திற்கும் குறைவான நிதி செயலாற்றலை அடைந்திருந்தது. | செயற்திட்ட முகாமைத்துவ பிரிவு ஆலோசனைச் சேவைகளுக்கான கேள்விதாரர்களின் மதிப்பீட்டை முடித்து ஆலோசனைக்கான கேள்வியை 2019 நவம்பரில் வழங்குவதற்கு எதிர்பார்த்திருந்தது. துரதிர்ஷ்டவசமாக, பெறுகை மேன்முறையீட்டு சபையில் விசாரணைக்கு காலம் எடுத்ததன் காரணமாகவும் சட்டமா அதிபர் திணைக்களத்திடமிருந்து சட்டப்பூர்வ அனுமதியைப் பெற்றதன் காரணமாகவும் ஆலோசனைக்கான ஒப்பந்தத்தை வழங்குதல் 2020 பெப்ரவரி வரை தாமதமாகியிருந்தது. | செயற்திட்ட அமுல்ப்படுத்தல் அட்டவணையின் பிரகாரம் செயற்திட்ட செயற்பாடுகளை உரிய காலத்தில் அமுல்ப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |